| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| முனைவர்.சி.உஷாராணி,<br>எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,<br>இணை இயக்குநர் (கல்வி) புதுச்சேரி. |

**ந.க.எண். 086254 /எப்1 /2020** **நாள் : 18.02.2020**

ஐயா/அம்மையீர்,

**பொருள் :** மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு மார்ச் 2020 – பள்ளி மாணாக்கருக்கான தேர்வுக் கூட நுழைவுச் சீட்டுகள் – பதிவிறக்கம் செய்திட தலைமையாசிரியர்களை அறிவுறுத்தக் கோருதல் – சார்பு.

-----

முதன்மைக் கல்வி அலுவலர்கள், தங்கள் மாவட்டத்திலுள்ள அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும், அவர்களது பள்ளியில் +1 பயிலும் மாணாக்கரின் மார்ச் 2020 மேல்நிலை மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விற்கான நுழைவுச் சீட்டுக்களைப் பதிவிறக்கம் செய்தல் தொடர்பாக பின்வரும் அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. தலைமை ஆசிரியர்கள் தங்கள் பள்ளி +1 மாணாக்கருக்கான மார்ச் 2020, மேல்நிலை முதலாமாண்டு தேர்விற்கான தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுக்களைப் www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்கு சென்று (click here to access online portal → HSE March 2020 First Year → School User ID → Password) **19.02.2020 (பிற்பகல் 3.00 மணி) முதல்** பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

2. +1 தேர்வில் தேர்ச்சி பெறாத பாடங்களை, மார்ச் 2020 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வின் போது மீண்டும் எழுதும் +2 பள்ளி மாணாக்கருக்கு தனியாக தேர்வுக்கூட நுழைவுச் சீட்டு வழங்கப்படமாட்டாது. அம்மாணாக்கர் எழுதவுள்ள +2 தேர்வுகளுக்கான பாடங்களோடு, தேர்ச்சி பெறாத +1 பாடங்களின் விவரங்களையும் பதிவு செய்து ஒரே தேர்வுக்கூட நுழைவுச்சீட்டாக பள்ளிகள் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

3. பள்ளித் தலைமையாசிரியர்கள் தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுக்களை மேற்குறிப்பிட்டுள்ள நாட்களில் தவறாமல் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். **எக்காரணங்கொண்டும் பதிவிறக்கம் செய்வதற்கான நாட்கள் நீட்டிக்கப்படமாட்டாது.**

ஒம்/–

**இயக்குநர்**

**நகல்:**

1. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.